செ.வெ.எண்: 09 நாள்: 07.04.2019

**நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தல்-2019-ஐ முன்னிட்டு நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு உட்பட்ட வாக்குச் சாவடி மையங்களில் பணிபுரியும் தேர்தல் அலுவலர்களுக்கு தேர்தலின் பொழுது கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு VVPAT இயந்திரத்தினை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பான இரண்டாம் கட்ட பயிற்சி நடைபெறுவதை**

**மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார் இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் அஞ்சுவட்டத்தம்மன் மகளிர் உயர்நிலைப்பள்ளியில் இன்று (07.04.2019) பாராளுமன்றத் தேர்தல்-2019 தேர்தல் பணியில் ஈடுபடும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு இரண்டாம் கட்ட பயிற்சி நடைபெறுவதை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார் இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தல்-2019-ஐ முன்னிட்டு நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு உட்பட்ட வாக்குச் சாவடி மையங்களில் பணிபுரியும் தேர்தல் அலுவலர்களுக்கு தேர்தலின் பொழுது கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு VVPAT இயந்திரத்தினை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பான இரண்டாம் கட்ட பயிற்சி வகுப்பு கீழ்கண்ட இடங்களில் நடைபெற்று வருகின்றது.

160 சீர்காழி சட்டமன்ற தொகுதியில் தென்பாதி விவேகானந்தா மெட்ரிக் உயர்நிலைப்பள்ளியிலும், 161 மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதியில் மன்னம்பந்தல் ஏ.வி.சி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும், 162 பூம்புகார் சட்டமன்ற தொகுதியில் செம்பனார்கோவில் கலைமகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும், 163 நாகப்பட்டினம் சட்ட மன்ற தொகுதியில் இ.ஜி.எஸ் பிள்ளை பொறியியல் கல்லூரியிலும், 164 கீழ்வேளூர் சட்டமன்ற தொகுதியில் அஞ்சுவட்டத்தம்மன் மகளிர் உயர்நிலைப்பள்ளியிலும், 165 வேதாரண்யம் சட்டமன்ற தொகுதிக்கு பாரதிதாசன் கல்லூரியிலும் நடைப்பெற்று வருகிறது. இதில் 1511 வாக்குச் சாவடிகளுக்கு 7334 பயிற்சியாளர்கள் கலந்து கொண்டு பயிற்சி எடுத்து வருகிறார்கள்.

இப்பயிற்சியில் வாக்குப்பதிவு இயந்திரங்களை கையாளும் முறை குறித்தும், வாக்குப்பதிவின் போது வாக்காளர்களிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் மற்றும் வாக்குச்சாவடி மையங்களில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும், குறுந்தகடு மற்றும் பவர்பாயிண்ட் மூலம் திரையிட்டு விளக்கப்பட்டு தேர்தல் பணியாற்றும் வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஆய்வின்போது, தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இளக்குநர் திரு.பாலமுருகன், மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் திரு.எம்.பாபுராபத், மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**நாகப்பட்டினம்.**